කෘෂිකර්ම, ග්‍රාමීය ආර්ථික කටයුතු, පශු සම්පත් සංවර්ධන, වාරිමාර්ග
සහ ධීවර හා ජලජ සම්පත් සංවර්ධන අමාත්‍යාංශය
கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி,
நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு
**Ministry of Agriculture, Rural Economic Affairs, Livestock Development, Irrigation and Fisheries and Aquatic Resources Development**

**(කෘෂිකර්ම අංශය / விவசாயப் பிரிவு / Agriculture Division)**

නො. 288, ශ්‍රී ජයවර්ධනපුර මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව.
இல. 288, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய, இலங்கை.
No. 288, Sri Jayawardenepura Mawatha, Rajagiriya, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය. / எனது இல. / My No. | 7/1/5/2019 යල | ඔබේ අංකය. / உமது இல. / Your No. | | දිනය. / திகதி. / Date. | 2019.03.16 |

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்,
மாவட்டங்களுக்குப் பொறுப்பான அனைத்து கமநல அபிவிருத்தி பிரதி/ உதவி ஆணையாளர்கள்,
அனைத்து கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும்,
மகாவலி பணிப்பாளர் நாயகம்,
நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்,
மாகாண விவசாய பணிப்பாளர்கள்,
தலைவர், இலங்கை உரக் கம்பனி,
தலைவர், கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

***2019 சிறு போகத்தில் நெற் செய்கை மேற்கொள்வதற்காக மானிய அடிப்படையில் உரம் வழங்குதல்***

மானிய உர நிகழ்ச்சித் திட்டத்தை 2019 சிறு போகத்திலும் செயற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெற் செய்கை மேற்கொள்வதற்காக யூரியா, முக்கூட்டு சுப்பர் பொஸ்பேற்று (ரீ.எஸ்.பீ) மற்றும் மியுரியேற்று ஒப் பொட்டாசு (எம்.ஓ.பீ) ஆகிய உரங்களின் 50 கிலோ கிராம் 500/- ரூபா வீதம் நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019 சிறு போகத்தில் நெற் செய்கைக்காக மானிய அடிப்படையில் உரம் விநியோகிக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் மற்றும் அறிவுரைகள் அடங்கிய வழிகாட்டல்களை உள்ளடக்கிய **மானிய உர விநியோக சுற்றறிக்கை 3/2019** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதில் அடங்கியுள்ள வழிமுறைகள், அறிவுரைகள், எல்லைகள் மற்றும் நிபந்தனைகள் போன்றவற்றை முறையாக விளங்கிக் கொள்ளுமாறும், 2019 சிறு போகம் ஆரம்பிக்க முன்னர் தேவையான விளக்கங்களை அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்குமாறும் தயவாய் வேண்டிக்கொள்கிறேன்.

உரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் விநியோகித்தலின் போது தாமதங்கள் மற்றும் அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காகவும் கமநல சேவைகள் நிலையங்களின் களஞ்சியங்களில் 50 கிலோ கிராம் உரப் பொதியொன்றினை 500/- ரூபாவிற்கு விற்பனை செய்வதை உறுதி செய்துகொள்ளும் பொருட்டும் உர விநியோக வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரிவினரும் சிறந்த விளக்கத்துடனும் ஒருங்கிணைப்புடனும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

அரசு பாரிய நிதிப் பங்களிப்பொன்றை வழங்கி நடைமுறைப்படுத்தும் இவ்வுர மானிய வேலைத்திட்டத்தின் ஊடாக அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் விவசாய மற்றும் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்வதற்கு இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின்படி செயலாற்றி நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பை மிகவும் வரவேற்கிறேன்.

கே.டீ.எஸ் ருவன்சந்திர
செயலாளர்,
கமத்தொழில் அமைச்சு

பிரதிகளுக்கு தயவுசெய்து அடுத்த பக்கத்தைப் பார்க்கவும்.

| | | |
|---|---|---|
| ලේකම් / செயலாளர் / Secretary | දුරකථන / தொலைபேசி / Telephone | 011-2879048 |
| | ඊ-මේල් / மின்னஞ்சல் / e-mail | secretary@agrimin.gov.lk |
| | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 011-2863497 |
| කාර්යාලය / அலுவலகம் / Office | දුරකථන / தொலைபேசி / Telephone | 011-2872093, 011-2872097 |
| | ඊ-මේල් / மின்னஞ்சல் / e-mail | info@agrimin.gov.lk |
| | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 011-2868910 |